இழந்த பெருமையை மீட்டுத் தந்தவர் மாண்புமிகு அம்மா அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

நீதி தேவதையின் சிலையைப் பார்த்தோம் என்றால், பொதுவாகவே அதன் கண்கள் கட்டப்பட்டிருக்கும்; நடமாடும் நீதி தேவதை, மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்களின் பார்வை பாரபட்சமற்றது. (மேசையைத் தட்டும் ஒலி) சட்டம் பயிலும் மாணவ, மாணவியர்கள் பயன்பெறும் வகையில் பல்வேறு அறிவிப்புகள்; சிறைவாசிகளின் நலன் காக்க, சிறைத் துறையை நவீனப்படுத்த, காலத்தால் சபிக்கப்பட்ட மக்களின் காயத்தைப் போக்கவும், கண்ணீரைத் துடைக்கவும், தாயினும் மேலான தங்கத் தலைவி மாண்புமிகு அம்மா அவர்களின் இன்றைய அறிவிப்புகள் அமைந்துள்ளன.

1993 ஆம் ஆண்டு, மே மாதம் 10 ஆம் நாள்தான், இதே தினத்தில்தான், இந்திய மகளிர் குழு முதன்முறையாக எவரெஸ்ட் சிகரத்தை அடைந்தது; சாதனை படைத்தது. மாண்புமிகு அம்மா அவர்களின் இன்றைய அறிவிப்புகளால், தமிழகம் வளர்ச்சியின் உச்சத்தையும், சிகரத்தையும் நிச்சயம் எட்டும். (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு அம்மா அவர்களுக்கு, மாண்புமிகு உறுப்பினர்கள் தெரிவித்த நன்றிகளோடு, என்னுடைய நன்றியையும் இணைத்துத் தெரிவித்துக்கொள்கிறேன்.

4. அறிக்கைகள் அளித்தல்

அரசு உறுதிமொழிக் குழு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *குழுக்களின் அறிக்கை அளித்தல். அரசு உறுதிமொழிக் குழுவின் அறிக்கை அளித்தல். மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர்.பி. உதயகுமார், அரசு உறுதிமொழிக் குழுத் தலைவர்.*

திரு. ஆர்.பி. உதயகுமார்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழக மக்களின் நல்வாழ்விற்காக, தமது வாழ்க்கையையே அர்ப்பணித்து, சோதனைகளையும், வேதனைகளையும், துன்பங்களையும், துயரங்களையும் தனதாக்கிக் கொண்டு, அஞ்சாத மன உறுதியுடனும், ஆழ்ந்த அறிவாற்றலுடனும், விடா முயற்சியுடனும், சீரிய சிந்தனையுடனும், மங்காத மதிநுட்பத்துடனும், மாசற்ற மனித நேயத்துடனும், பண்பட்ட தொலைநோக்குப் பார்வையுடனும், ஊண், உறக்கம்*

[திரு. ஆர்.பி. உதயகுமார்] [2013 மே 10

பாராமல், ஊர் உறங்கும் வேளையிலும் அயராது உழைத்து, இவ்வையகத்திற்கே வழிகாட்டுகின்ற வகையில் வாழும் மனித தெய்வம் நம் மாண்புமிகு அம்மா அவர்கள்.

இத்தாய்த் தமிழ்நாட்டிலே தனி மனித இராணுவமாய் சாதித்துக் காட்டிய, கழக அரசின் ஈராண்டு சாதனை வரலாற்றின் வழி நடந்து, இத்தரணியிலே தலைநிமிர்ந்து நிற்கிறது நம் தாய்த் தமிழ்நாடு. வற்றாத கங்கை நதியாக, வற்றாது வந்து கொண்டிருக்கும் நம் தாயின் சாதனை வரலாற்றின் வழிநடக்கும்போதுதான் இத்தரணியிலே தலைநிமிர்ந்து நிற்கும் இந்தியத் திருநாடு என்பதோடு மாத்திரமல்லாமல், மனித குலத்தைப் பாதுகாத்து, வளமோடு வாழ வைத்துக்கொண்டிருக்கின்ற நம் தெய்வத் தாயின் வெற்றி வரலாறுதான் இனி வரும் காலமெல்லாம் இந்த அவணிக்கு வழிகாட்டிடும் ஒரே புனித வரலாறாக, புதிய சகாப்தம் படைத்திடும் என வணங்கிக் கூறிக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2012–2013 ஆம் ஆண்டுக்கான தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை அரசு உறுதிமொழிக் குழுவின் ஐம்பத்து எட்டு முதல் தொண்ணூற்று ஐந்து வரையிலான 38 அறிக்கைகளைக் குழுவின் சார்பாகப் பேரவைக்கு அளிக்கின்றேன்.

பிற்பகல் 1–05

5. மானியக் கோரிக்கைகள், 2013–2014, விவாதமும் வாக்கெடுப்பும்—தொடர்ச்சி

(அ) கோரிக்கை எண் 43–பள்ளிக் கல்வித் துறை

(ஆ) கோரிக்கை எண் 46–தமிழ் வளர்ச்சி (தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை)

(இ) கோரிக்கை எண் 49–இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை

(அ) கோரிக்கை எண் 43–பள்ளிக் கல்வித் துறை

மாண்புமிகு பேரவைத் தலைவர்: 2013–2014 ஆம் ஆண்டிற்கான மானியக் கோரிக்கைளின்மீது விவாதமும், வாக்கெடுப்பும். மானியக்